## தமிழ்நாடு – ஒன்றிய அரசுக்கு ஒருபோதும் அடிபணியாது!

# நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான ஓரணி!

### உலக மக்கள் தொகை நாளையொட்டி விடுத்த வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஜூலை 13-**

**உலக மக்கள் தொகை நாளையொட்டி விடுத்த சமூக வலைதளப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாடு உங்களுக்கு (ஒன்றிய அரசுக்கு) அடிபணியாது! நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான அணி!" என்று சூளுரைத்துள்ளார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உலக மக்கள்தொகை நாளில், ஒன்றிய அரசுக்கு ஒரு நினைவூட்டல் :

- **தமிழ்நாடு மக்கள்தொகைக் கட்டுப்பாட்டில் முன்னணி வகிக்கிறது,**
- **பெண்களின் மாண்பைக் காத்து அவர்களுக்கான அதிகாரத்தை வழங்குகிறது.**
- **அனைவருக்கும் மருத்துவம் மற்றும் கல்வியை உறுதிசெய்கிறது.**
- **நீடித்து நிலைக்கத்தக்க வளர்ச்சியை முன்னெடுக்கிறது.**

ஆனால், பதிலுக்கு நமக்குக் கிடைப்பது என்ன?

குறைவான மக்களவைத் தொகுதிகள். குறைவான நிதி ஒதுக்கீடு. நாடாளுமன்றத்தில் இருந்து ஒதுக்கப்படும் நமது குரல்.



ஏன்? ஏனென்றால், தமிழ்நாடு சரியானதைச் செய்தது. அதுதான் டெல்லியை அச்சுறுத்துகிறது.

இதைவிட மோசம் என்ன என்றால், பழனிசாமி அவர்களும் அவரது கட்சியும் தமிழ்நாட்டின் பக்கம் நிற்காமல், டெல்லிக்குத் துணைபோகிறார்கள். நாம் எட்டிய வளர்ச்சிக்காக நம்மைத் தண்டிக்கும் அநியாயமான தொகுதி மறுவரையறையை ஆதரிக்கிறார்கள்.

தெளிவாகச் சொல்கிறேன்: தமிழ்நாடு உங்களுக்கு அடிபணியாது. நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான ஓரணி!

நமது மண், மொழி, மானம் காக்க இணைவீர் ஓரணியில் தமிழ்நாடு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# அலுவலர்களின் பயன்பாட்டிற்கு ரூ.17.65 கோடி மதிப்பில் 198 வாகனங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 13 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும், உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும, கள ஆய்வு மேற்கொள்ளவும் பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாகவும், துறை அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 202526 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற்பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத்து, அலுவலர்களுக்கு வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 109 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1018 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை நொளம்பூரில் பத்திரப் பதிவுத் துறை சார்பில்

# மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த சேவை மையம்!

### அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 13-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, பதிவுத்துறை, பொது மக்களுக்கு அதிநவீன தொழில்நுட்பவசதிகளுடன் அனைத்து பதிவுசேவைகளையும் எளிதாக வழங்கி, அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் முக்கிய துறையாக தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

கடந்த 2024 - 2025 ஆம் நிதியாண்டில் தமிழகம் முழுவதும் 33, 60, 382 ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதில் சென்னை மண்டலத்தில் மட்டும் 3, 30, 565 பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவுத்துறையின் சேவைகளை விரைவாக வும், வெளிப்படைத்தன்மையுடனும் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தபட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக,



நேற்று, சென்னை நொளம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகங்கள் வளாகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சுயஉதவி குழுவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளால் நடத்தப்பட உள்ள "ஒருங்கிணைந்த சேவை மையம்" திறந்து வைக்கப்பட்டது.

இந்த சேவை மையத்தின் மூலம் பொதுமக்களுக்கு வில்லங்கச்சான்று விண்ணப்பித்தல் (Applying for EC) ஆவணத்தின் சான்றிட்ட நகல் விண்ணப்பித்தல் (Applying for CC) திருமண வடிப்பு விண்ணப்பித்தல் (Marriage Extract) வில்லை முன்பதிவு செய்ய விண்ணப்பித்தல் (Booking of Tokens) இணைய வழி ஆவணம் உருவாக்குதல் (Online Registration) சங்க பதிவு விண்ணப்பித்தல் (Applying for Societies Registration) கூட்டாண்மை நிறுவன பதிவு விண்ணப்பித்தல் (Applying for Firms Registration) உள்ளிட்ட சேவைகள் குறைந்த கட்டணத்தில் வெளிப்படைத்தன்மையுடன் அளிக்கப்படும்.

இந்த பணிகளை மேற்கொள்ளும் சுயஉதவிகுழுவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு நிலையான வருமான வாய்ப்பும் இதன் மூலம் கிடைக்கப்பெறும்.

இந்நிகழ்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம், க.கணபதி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அரசுசெயலாளர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ்பொன்ராஜ் ஆலிவர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலத்தில்

# மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி-திண்டுக்கல் ஐ.லியோனி -சூர்யா வெற்றிகொண்டான்-ஜோஸ்பின் இலக்கிய ராணி சிறப்புரை!

மதுரை, ஜூலை13-

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக திருமங்கலத்தில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டத்தில் ஆர்.எஸ். பாரதி, திண்டுக்கல் ஐ.லியோனி, சூர்யா வெற்றி கொண்டான், ஜோஸ்பின் இலக்கிய ராணி உள்ளிட்டோர் எழுச்சி உரையாற்றினார்கள், அதன் விவரம்





தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் ஜெயந்தி விழா முன்னிட்டு மாவட்ட தி.மு.க அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருஉருவப்படத்திற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை வகித்து மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல் காதர்,மாவட்ட துணை செயலாளர் கென்னடி,ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், ஜெயா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், சுப்பிரமணியன்,மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி குட்டி என்ற சீதாராமன்,மாவட்ட அயலக அணி ராமராஜ்,அறங்காவலர் சுந்தர்ராஜன்,திரிகூடபுரம் சுப்பிரமணியன்,மாரித்துரை, கருப்பண்ணன்,கஜேந்திரன், வெல்டிங் மாரியப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பிலும் தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பிலும் நடைபெற்ற இந்த மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகித்தார்

கழக அமைப்புச் செயலாளர், வழக்கறிஞர் ஆர்.எஸ் பாரதி எழுச்சியுரையாற்றி கழக அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும் திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்களுக்கு செய்த மக்கள் நலத்திட்ட பணிகளையும், எதிர்கட்சிகளின் மக்கள் விரோத போக்கையும் எடுத்துக்கூறி நீண்ட எழுச்சி உரையாற்றினார்

மேலும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், கழக இளம் பேச்சாளர் ஜோஸ்பின் இலக்கிய ராணி உள்ளிட்டோரும் சிறப்புரை யாற்றினார்கள்

இந்த மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு இளைஞர் அணி அமைப்பாளர் வி.விமல், நகரச் செயலாளர் ஸ்ரீதர், நகராட்சி மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், ஆர். முத்துக்குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆதவன் அதியமான், தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ எம்.அலாவுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். மாமன்ற உறுப்பினர் திருக்குமார் நன்றி கூறினார்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருள்வாசகன் தலைமையில் பழனிசெட்டிபட்டி பேரூர் பகுதியில் வீடு வீடாகச் சென்று 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

## வள்ளியூர், இராதாபுரம் ஒன்றியங்களில்

# தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்டப் பணிகள்!

### சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு ஆய்வு செய்தார்!

நெல்லை, ஜூலை 13-

நெல்லை மாவட்டம் வள்ளியூர், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தி ற்கு உட்பட்ட 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 605 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நெல்லை மாவட்டம் வள்ளியூர், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத் திற்கு உட்பட்ட 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.605 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

நெல்லை மாவட்டத்தில் 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.605 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர்திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கிலும், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு இராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கிலும் ஊரக பகுதிகளில் நடைபெற்று வரும் இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,தலைமை யில், மாவட்ட ஊராட்சித்தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் முன்னிலையில் குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் ஆய்வு நடத்தினார்கள்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 831 ஊரக குடியிருப்பு களுக்கு ரூ.605 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்து, தாமிரபரணி கூட்டுக்குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 18 ஊராட்சிகளுக்கும், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 27 ஊராட்சிகளுக்கும் வழங்கப்படவுள்ள குடிநீர் திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்டார்கள். குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

பாளையங்கோட்டை ஒன்றியம் மேலமுன்னீர்பள்ளம் அருகில் தாமிரபரணி ஆற்றில் ஒரு நீர்சேகரிப்பு கிணறு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.. அந்த கிணற்றிற்கு மின் வழித்தடங்கள் அமைக்கும் பணிகள் மின்சாரத்துறையின் மூலம் நடைபெற்று வருவதை விரைந்து முடிக்க வேண்டும். நீர்சேகரிப்பு கிணற்றின் மூலம் பெறப்படும் நீர் புதிதாக சிங்கிகுளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் 22.79 இலட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறத. சிங்கிகுளத்தில் நடைபெற்று வரும் பணிகள் 95 சதவீதம் முடிந்துள்ளது.மீதமுள்ள 5 சதவீத பணிகளும் முடிந்து அடுத்தமாதம் இறுதிக்குள் இச்சுத்திகரிப்பு நிலையத்திற்கு தண்ணீர் கொண்டுவரப்படவுள்ளது.

தொடர்ந்து,சிங்கிகுளம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பிரண்டை மலையிலுள்ள 9.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள முதலாவது தலைமை மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்படவுள்ளது.பின்னர் அங்கிருந்து 6.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தெற்கு வள்ளியூர் தலைமை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும், இராதாபுரம் தலைமை மேல்நிலை நீர்த்தேக்க த்தொட்டிக்கும் 303.88 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் வழியாக நீரேற்றம் செய்யப்படவுள்ளது. இன்னும் 60 முதல் 90 நாட்களுக்குக் குள் இப்பகுதி மக்களுக்கு தாமிரபரணி கூட்டுக்குடிநீர் கிடைக்கப்படவுள்ளது. இப்பணிக்காக மாவட்ட நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை, பணியாளர்களும் முழுவீழ்ச்சில் இதற்கான பணிகளை மேற் கொண்டு வருகிறது. அவர்களை நான் பாராட்டுகிறேன் தங்கள் ஊராட்சி பகதிகளில் குடிநீர் திட்ட பணிகளுக்கு ஊராட்சி மன்ற தலைவர்களும் முழு ஒத்துழைப்புடன் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து குடிநீர் திட்டப்பணிகளை விரைவாக முடிக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில்,மேற்பார்வை பொறியாளர் தி.வெங்கடேஷ் நிர்வாக பொறியாளர்கள் இராமலெட்சுமி, கனகராஜ்,உதவி இயக்குநர் ஊராட்சிகள் முகமது ஷபி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மனோகர்,முருகன் (வள்ளியூர்), அலெக்ஸ்,சாமுவேல் (இராதாபுரம்), மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,குடிநீர் வடிகால் வாரிய பணியாளர்கள்,ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவிலில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் திரு உருவப்படத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் யு.எஸ்.டி.சீனிவாசன்,டாக்டர் செண்பகவிநாயகம், இல.சரவணன், புனிதா, லாலா சங்கரபாண்டியன், கடற்கரை, சேர்மதுரை, கிறிஸ்டோபர், வெள்ளத்துரை, பால்ராஜ், பெரியதுரை, அன்பரசு, பிரகாஷ், அந்தோணிசாமி, தேவா என்ற தேவதாஸ், உதயகுமார், முகேஷ், சந்திரன், முப்புடாதி, முத்துக்குமார், வெள்ளத்துரை, கார்த்தி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் இணைஞரணி துணை அமைப்பாளர் செல்லத்துரை, தேனி நகர இளைஞரணி அமைப்பாளர் அரவிந்த் ஆகியோர் தலைமையில் தேனி நகர பகுதிகளில் வீடு வீடாகச் சென்று 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய வாக்காளர் சேர்ப்பு நடைபெற்றது.